1993 ஏப்ரல் 19]

390—

கூட்டுறவு நூற்பாலைகளில் நூற்புத்துறை பொறியாளர்களைத் தனி அதிகாரியாக நியமிக்கும் திட்டம்.

*9868—திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நூற்பாலைகளில் தற்போது தனி அதிகாரிகளான வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் இணை இயக்குநர் ஆகியோருக்கு பதிலாக தொழில்நுட்ப வல்லுநர்களாக கல்லூரியில் இருந்து வெளிவருகின்ற டெக்ஸ்டைல் பொறியாளர்களைத் தனி அதிகாரிகளாக நியமிப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது நூற்பாலைகளில் பணி புரியும் தொழில்நுட்ப வல்லுநர்களை பதவி உயர்வு கொடுத்து தனி அதிகாரிகளாக நியமிக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகள் 1988 விதி எண் 145-ன் கீழ் கூட்டுறவு நூற்பாலைகளில் தனி அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றவர்கள், 9 சதவீதம் கைத்தறித் துறையின் சார்பிலும், 9:6:3 என்ற விகிதாசாரத்தில் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். 18 நூற்பாலைகளில், 9 தனி அதிகாரிகள் கூட்டுறவுத் துறையின் சார்பிலும், 6 பேர் ரெவின்யூ டிப்பார்ட்மென்ட்-ன் சார்பிலும், 3 பேர் டெக்னிக்கல் அசிஸ்டென்டாக நியமிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூற்பாலைகள் நஷ்டத்தில் இயங்குவதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், வருவாய்த் துறையைச் சார்ந்த அதிகாரிகள், இதற்குச் சம்பந்தமில்லாத அவர்கள் அங்கே பணியாற்றுவது தான் முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறதே, இதனை அரசு அறியுமா, அதை நீக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கோடிட்டுச் சொல்லி இருக்கிறேன். 1988 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டிருக்கின்ற விதி 145-ன் கீழ்தான், இன்றையதினம் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் சிறப்பானவையாக இருந்தாலும் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டியிருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கான தக்க ஆலோசனை வழங்குவார்களேயானால், தமிழகத்தின் முதல்வர் இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்களோடு கலந்தாலோசித்து, இதற்கு எந்தவிதத்தில் மாறுதல் செய்தால் ஆலைகள் சிறப்பாக அமைவதற்கு வழிவகை இருக்கும் என்பதை ஆராயலாம் என நான் துணைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 391, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

391—

தெங்குமரஹாடா கிராமத்திற்குச் செல்ல சிறிய ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

*9468—டாக்டர் எம். கருப்புசாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெங்குமரஹாடா என்ற குன்னூர் தொகுதியில் உள்ள கிராமத்திற்குச் செல்ல சிறிய ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?